# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org


**வடமாகாணசபைத் தேர்தல் 2013**

**ஊடக அறிவித்தல் இல 04**

**செப்டெம்பர் 18, 2013, மு.ப.11.30** : வட மாகாணம், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், சாவகச்சேரி தேர்தல் தொகுதி, மிருசுவில் துர்க்கையம்மன் கோவில், சாவகச்சேரி.

சம்பவத்தின் சாட்சியான, சாவகச்சேரி நகர சபை உறுப்பினரான (த.தே.கூ), திரு.அருணாசலம் பாலகுமாரன் அறிவித்தது, மதியம் 12.00 மணியளவில், சாகச்சேரியிலுள்ள மிருசுவில் துர்க்கையம்மன் கோவிலுக்கருகாமையில் 25 – 30 வரையிலான ஒரு குழுவினர் ஐ.ம.சு.கூ பிரச்சார சாதனங்களை விநியோகித்துக் கொண்டிருந்தனர். இந்தக் குழுவினர் இராணுவத்துடன் தொடர்புபட்டவர்களாக இருந்தனரெனவும் மற்றும் சீருடையிலிருந்த இரண்டு இராணுவ உத்தியோகத்தர்கள் ஐ.ம.சு.கூ துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த குழுவுக்கு பாதுகாப்பினை வழங்கிக் கொண்டிருந்ததைக் கண்டதாகவும் திரு.அருணாசலம் பாலகுமாரன் குற்றஞ் சாட்டினார்.

திரு.அருணாச்சலம் பாலகுமாரன் தே.வ.க.நி ஐ பி.ப 2.20 அளவில் தொடர்பு கொண்டு தெரிவிக்கையில், அச்சமயத்தில் இராணுவத்துடன் தொடர்புபட்ட ஒரு குழுவினால் தான் துரத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். அவரோடு இருந்து த.தே.கூ இற்காக பிரச்சாரம் செய்து கொண்டிருந்த ஆட்களை இராணுவம் தாக்கியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டது. தாக்கப்பட்டவர்கள் ஓடி அடைக்கலம் தேடிய இடமான மருதங்குளம் பிள்ளையார் கோவிலில், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, திரு.எதிரிசிங்க பிரசன்னமாக இருந்ததாகவும் திரு.அருணாச்சலம் பாலகுமாரனால் தே.வ.க.நி இற்கு தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தை தே.வ.க.நி தொடர்பு கொண்ட போது, பொறுப்பதிகாரி நடமாடும் அணியொன்றுடன் சம்பவமொன்றைப் புலன்விசாரணை செய்வதற்காக சென்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. பின், பொறுப்பதிகாரி எதிரிசிங்க அவர்களை தே.வ.க.நி தொடர்பு கொண்ட போது, தன்னை சற்று நேரத்தின் பின்னர் தொடர்பு கொள்ளுமாறு எங்களைக் கேட்டுக் கொண்டார். அதன் பின்னர் பொறுப்பதிகாரி திரு.எதிரிசிங்க அவர்களை தே.வ.க.நி தொடர்பு கொள்வதற்கு பல தடவைகள் முயன்ற போதும், பி.ப 4.30 வரை அவரை தொடர்பு கொள்ள முடியாதிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் அவரைத் தொடர்பு கொண்ட போது, மருதங்குளம் பிள்ளையார் கோவிலுக்கருகில் ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்ததைக் குறிப்பிட்டதோடு பொலிஸில் உத்தியோகபூர்வமான ஒரு முறைப்பாடு செய்யப்படாததினால் தன்னால் அது குறித்து தகவல் எதனையும் வெளியிட முடியாது எனத் தெரிவித்தார். மேலும், சம்பந்தப்பட்ட நபர்களை முறைப்பாடொன்றைச் செய்வதற்காக கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு தான் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.இச்சம்பவத்தில் இராணுவத்துக்கு சம்பந்தம் இல்லையொன, பொலிஸ் வலியுறுத்தியது. மேலதிக கருத்துக்களுக்காக திரு.அருணாச்சலம் பாலகுமாரனை இன்று பிற்பகலில் இருந்து தே.வ.க.நி ஆல் தொடர்பு கொள்ள முடியாதுள்ளது.

கலாநிதி பா.சரவணமுத்து
இணை-அழைப்பாளர்

சுனில் ஜயசேகர
இணை-அழைப்பாளர்

உதய கலுபதிரண
இணை-அழைப்பாளர்